பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல: 02 /2019

இல:20, வோட் பிளேஸ்
கொழும்பு-07
2019.01.29

பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள்,
வளாக அதிபர்கள்,
நிறுவகப் பணிப்பாளர்கள்.

## மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவைச் செலுத்தல்

2019.01.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் விதத்தில் மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவைச் செலுத்தவதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் 2019.01.10 ஆந் திகதியன்று இடம்பெற்ற அதனுடைய 1001 ஆவது கூட்டத்தொடரின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2.பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களின் பரிந்துரையின்பிரகாரம் மற்றும் மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் ஒத்துக்கொண்டிருக்கும் அடிப்படையில் மகாபொல புலமைப்பரிசில் மாதாந்த கொடுப்பனவானது மகாபொல பெறுநர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகவே வைப்பிலிடப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் மகாபொல புலமைப்பரிசில் பெறுவதற்குத்தகுதி பெற்றிருக்கின்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியலானது பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களின் பரிந்துரையுடன் மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவிற்கான வழிகாட்டலானது, மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்படும்.

3. மகாபொல புலமைப்பரிசில் திறைசேறிப் பங்களிப்புத் தொகையினைச் செலுத்துவதற்கு அவசியமான நிதியானது,பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களினால்பரிந்துரைக்கப்படும் பிரகாரம் மகாபொல கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் திகதிக்கு முன்னதாகவே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு நேரடியாகவே அனுப்பி வைக்கப்படும்.

மகாபொல திறைசேறிப் பங்களிப்புத் தொகையினைச் செலுத்துவதற்குத் தேவையான நிதியினை பரிந்துரைக்கும் மாதிரிக் கட்டமைப்பானது இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

4. இணைப்பு I இல் தரப்பட்டிருக்கும் பிரகாரம் **"மாதாந்த கொடுப்பனவுப் பரிந்துரை"**இனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதிக்கு மகாபொல புலமைப்பரிசில் மாதாந்தக் கொடுப்பனவானது மாணவர்கள் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.அதனடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள கால எல்லையினைபல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களானவைஉரிய முறைப்படிபின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | நடவடிக்கை | கால எல்லை |
|---|---|---|
| 01 | பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினால் மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவினைப் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்களின் பரிந்துரைக்கப்பட்ட பெயர்ப் பட்டியலானது மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். | முந்திய மாதத்தின் 20 ஆம் நாள்<br><br>அதாவது:கொடுப்பனவானது செலுத்தப்படும் மாதம் : ஏப்ரில் முந்திய மாதம்: மார்ச் |
| 02 | மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் கொடுப்பனவுக் கால அட்டவணையானதுபல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களிற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். | முந்திய மாதத்தின் 30 ஆம் நாள் |

| | | |
|---|---|---|
| 03 | பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினால் மாதாந்தக் கொடுப்பனவுப் பரிந்துரையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | கொடுப்பனவானது செலுத்தப்படும் மாதத்தின் 05 ஆம் நாள் உதாரணம் : ஏப்ரில் |
| 04 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்குநிதிப் பரிமாற்றம் செய்தல் | கொடுப்பனவுமேற்கொள்ளப்படும் நாளுக்கு முந்திய ஒரு நாள் |
| 05 | மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திலிருந்து மகாபொல புலமைப்பரிசில் மாதாந்த கொடுப்பனவானது மாணவர் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். | கொடுப்பனவு செலுத்தப்படும் மாதத்தின் 15 ஆம் நாள் |

இது குறித்த மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்குத் தேவைப்படின், தயவு செய்து011-2123485 என்ற தொலைபெசி இலக்கத்தின் வாயிலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிக் கணக்காளரை தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பமிட்டது. பேராசிரியர்.மொஹான் த சில்வா**
தலைவர்

பிரதிகள்:

1. செயலாளர் / நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு
2. திறைசேறிக்கான பிரதிச் செயலாளர்
3. தலைவர் அலுவலகம் / ப.மா.ஆ
4. உப தலைவர் / ப.மா.ஆ
5. செயலாளர் / ப.மா.ஆ
6. பணிப்பாளர் / மகாபொல நம்பிக்கை நிதியம்
7. பல்கலைக்கழகங்களின் பீடாதிபதிகள்
8. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
9. கணக்காளர் / ப.மா.ஆ
10. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள்
11. உயர் கல்வி நிறுவகங்கள் / நிறுவகங்களின் நூலகர் / சிரேஷ்ட உதவி நூலகர் / உதவி நூலகர்

12. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள் - உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள், உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர்கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
14. உள்ளகக் கணக்காய்வாளர்- ப.மா.ஆ
15. கணக்காய்வாளர் நாயகம்

கோப்பு இல: ப.மா.ஆ / எப் 09/ மாணவர் நிதியுதவி /2018

## மாதாந்தக் கொடுப்பனவுப் பரிந்துரை- மகாபொல புலமைப்பரிசில்

பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவகம் : ..........................................................

மாதம் :..........................................................

| கல்வியாண்டு | | ………………………… | | | ………………………… | | | ………………………… | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பீடத்தின் பெயர் | தவணைப் பெறுமதி | தவணைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | பெறுமதி | தவணைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | பெறுமதி | தவணைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | | | | | | | | | |

மகாபொல புலமைப்பரிசிலுக்கான .............................................. மாதத்திற்குரிய திறைசேறிப் பங்களிப்பானது ரூபா.........................................எனவும் மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு நிதியினை பரிமாற்றுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

............................................... ............................................ ..........................................................................................

நிதிப் பொறுப்பாளர் பதிவாளர் உபவேந்தர் / பணிப்பாளர் / வளாக முதல்வர்

திகதி..............................................